(இ) இவைகளை வெட்டி எடுத்துப் பயன்படுத்த அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) நீலகிரி மலையில் இரும்பு மாக்சைட், தங்கம், காக்காய்ப் பொன், சீனக்களிமன் ஆகிய தாதுப்பொருட்கள் கிடைக்கின்றன. இப்பகுதியில் கிடைக்கும் இரும்புத் தாதுவை வெட்டி எடுக்க இரண்டு உரிமமும், பாக்சைட் தாதுவை வெட்டி எடுக்க ஒரு உரிமமும், காக்காய்ப்பொன் தாதுவை வெட்டி எடுக்க ஐந்து உரிமமும் வழங்கப் பட்டுள்ளன. அவை தனி நபர்களால் வெட்டியெடுக்கப்படுகின்றன. இப் பகுதியில் கிடைக்கும் கனிவளங்கள் மிக சொற்ப அளவில் இருப்பதால், இதை சிக்கனமான முறையில் வெட்டியெடுத்து தொழிற்சாலை அமைக்க இயலாது.

Sale price of Arasu Cement

* 73 *Q* —THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that the sale price of Arasu Cement has gone appreciably high during the years 1970–71–72; and

(*b*) if so, the reasons therefor?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) புதுடில்லியில் உள்ள சிமிட்டி கட்டுப்பாட்டு அதிகாரி 1967-ஆம் ஆண்டு சிமிட்டி கட்டுப்பாட்டு ஆணையின்கீழ் சிமிட்டி விலை, சிப்பச் செலவுகள், ஆயத்தீர்வை ஆகியவற்றைத் திருத்தியமைத்ததே, அரசு சிமிட்டி உட்பட எல்லா ரக சிமிட்டியின் விலை உயர்ந்ததற்குக் காரணமாகும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, சிமிண்ட் விலையானது 14 ரூபாய் ஒரு மூட்டைக்குக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இது நிர்ணயித்த விலைக்குக் கூடுதலாக இருக்கிறது. இதைக் கண்காணிக்க அரசாங்கம் என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள்?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சிமிண்ட் விலையை மத்திய அரசாங்கத்தான் நிர்ணயிக்கிறது. மூன்று மாதத்திற்கு ஒரு முறை சிமிண்ட் விலை, பேக்கிங் சார்சஸ், எக்ஸைஸ் வரி இவற்றையெல்லாம் கணக்கிலெடுத்துக் கொண்டு நிர்ணயிருக்கிறார்கள். 31—12—1972 வரை ஒரு டன் 21277 ரூபாய் என்று நிர்ணயித்திருக்கிறார்கள். இதை மீறி யாராவது விற்றார்கள் என்று தகவல் கொடுத்தால் நடவடிக்கை எடுக்கலாம்.

1973 பிப்ரவரி 8]

THIRU B. VENKATASAMI: Contractors are finding it difficult so as to carry on their work because of increase in cement rate. May I know from the Hon. Chief Minister whether they are going to enhance the rate for contractors in the National Highways and Public Works Departments?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இது பொதுப்பணித் துறையிலே கேட்கப் படவேண்டும்.

திரு. கே. எ. வகாப்: தலைவர் அவர்களே, சிமிண்ட் விலை அதிகமாக உண்மையிலேயே வெளிமார்க்கட்டிலே, கள்ளமார்க்கட்டிலே விற்கப்படுகிறது. அதை அரசு கண்காணிக்கவேண்டும். மின்சாரப் பற்றுக்குறை இருப்பதன் காரணமாக இப்படியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இந்த நிலையில் வெளி மாநிலங்களிலிருந்து சிமிண்ட் வரவழைத்து நியாயமான விலையில் கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: சிமிண்ட்டை பொறுத்தவரையில் நாம் தான் அதிகமாக உற்பத்திசெய்கிறோம். வட மாநிலங்களுக்கு நாம் கொடுக்கவேண்டுமா என்பதுதான் இப்பொழுது கேள்வி. மாண்புமிகு உறுப்பி னர் அவர்கள் சொன்னதைப்போன்று இடைக்கால சங்கடங்கள் ஏற்பட்டு இருக் கின்றன. விலை கூட விற்கிறார்கள் என்று தகவல்கள் தந்தால் அதைப்பற்றி மத்திய அரசாங்கத்திற்கு நாம் தெரிவிக்கலாம்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவர் அவர்களே, சிமிண்ட் விலை கூட்டி விற்கிறார்கள் அது மட்டுமல்ல, கலப்படம் செய்கிறார்களே, அதைத் தடுப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறார்கள் என்பதை அறிய விரும்புகி றேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அப்படித் தகவல் என்னிடத்தில் இல்லை. இருப்பதாகத் தெரிவித்தால் நடவடிக்கை எடுக்கத் தயங்கமாட்டோம்.

அரக்கோணம் நிலவள வங்கி.

* 74 வினா—திரு. எ. வகாப்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணத்தில் உள்ள கூட்டுறவு நிலவள வங்கியின் நிர்வாக சபை கலைக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) ஆம்.

(இ) நிர்வாகம் செவ்வனே நடைபெறவில்லை என்பது காரணம்.